KAMARAJ COLLEGE (Autonomous)

Accredited with A+ Grade by NAAC

(Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli)

(4 Pages) **Reg. No:……**

Question Code No : 26O00525-T **Course Code : 24UMHI53**

UG Degree - End Semester Examinations, November 2026

Fifth Semester

B.A. HISTORY

Regional History – (History of Thoothukudi)

(For those who joined in July 2024 onwards)

Time : 3Hours **Maximum : 75 Marks**

பகுதி அ - (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:

CO:1 K:1 1. தூத்துக்குடியின் பண்டைய வரலாற்றை அறிய முதன்மையாக பயன்படும் ஆதாரம் எது?

(அ) நவீன செய்தித்தாள்கள் (ஆ) சங்க இலக்கிய குறிப்புகள்

(இ) திரைப்பட ஆவணங்கள் (ஈ) வானொலி நிகழ்ச்சிகள்

CO:1 K:2 2. வெளிநாட்டு பயணிகளின் பயணக் குறிப்புகள் தூத்துக்குடி பற்றி என்ன தெரிவிக்கின்றன?

(அ) ஒரு சிறிய ஊர் (ஆ) ஒரு பாலைவன பகுதி

(இ) ஒரு நவீன துறைமுகம் (ஈ) ஒரு முக்கிய வர்த்தக மற்றும் முத்து குளிக்கும் மையம்

CO:2 K:1 3. தூத்துக்குடியில் போர்த்துகீசியர் ஆட்சியின்போது முதன்மையாக நடைபெற்றது எது?

(அ) மத மாற்றம் மற்றும் முத்து, சங்கு வர்த்தகம் (ஆ) தொழிற்சாலைகள் நிறுவுதல்

(இ) புதிய பல்கலைக்கழகம் திறத்தல் (ஈ) இரயில் பாதை அமைத்தல்

CO:2 K:2 4. தூத்துக்குடியில் போர்த்துகீசியர் ஆட்சி வர்த்தகத்தில் முதன்மையாக கவனம் செலுத்திய பொருள் எது?

(அ) மிளகு (ஆ) தேயிலை

(இ) முத்து மற்றும் சங்கு (ஈ) இரும்பு தாது

CO:3 K:2 5. வ.உ.சி. மற்றும் பாரதியார் தூத்துக்குடியில் முதன்மையாக எதில் பங்களித்தனர்?

(அ) கோயில் கட்டுமானம் (ஆ) துறைமுக அமைப்பு

(இ) பள்ளி நிர்வாகம் (ஈ) சுதந்திரப் போராட்டம்

CO:3 K:1 6. வீரபாண்டிய கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே ஏற்பட்ட முக்கிய பிரச்சனை என்ன?

(அ) வரி (ஆ) கோயில் கட்டுமானம்

(இ) வர்த்தக ஒப்பந்தத்தம் (ஈ) கல்வி முன்னேற்றம்

CO:4 K:1 7. புனித திரித்துவ ஆலயம் மற்றும் ஆஷ் நினைவுச் சின்னம் தூத்துக்குடியில் எதை குறிக்கின்றன?

(அ) வணிக மையங்கள் (ஆ) அரசு அலுவலகங்கள்

(இ) மத மற்றும் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட நினைவிடங்கள் (ஈ) விளையாட்டு திடல்கள்

CO:4 K:2 8. நவ திருப்பதி என்பது எதை குறிக்கிறது?

(அ) ஒன்பது சிவன் கோயில்களின் தொகுப்பு (ஆ) ஒன்பது வைணவ கோயில்களின் தொகுப்பு

(இ) ஒன்பது துறைமுகங்கள் (ஈ) ஒன்பது பள்ளிகள்

CO:5 K:2 9. தூத்துக்குடியின் பாரம்பரிய தொழிலாக கருதப்படுவது எது?

(அ) பருத்தி தொழில் (ஆ) இரும்பு தொழில்

(இ) மரம் வெட்டும் தொழில் (ஈ) சாக்லேட் தொழில்

CO:5 K:3 10. தூத்துக்குடியில் தொழிலாளர் வேலைநிறுத்தம் முதன்மையாக எதனை எதிர்த்தது?

(அ) புதிய தொழில்நுட்பம் (ஆ) பள்ளிக் கல்வி

(இ) சுற்றுலா மேம்பாடு (ஈ) நியாயமற்ற சம்பளம் மற்றும் பணி நிலைமைகள்

பகுதி ஆ – (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளி

CO:1 K:2 11. (அ) தூத்துக்குடியின் தொன்மையான வரலாற்றை சங்க இலக்கிய குறிப்புகளின் அடிப்படையில் விளக்குக.

(அல்லது)

(ஆ) தூத்துக்குடி பற்றிய பயணக் குறிப்புகளை ஆய்வு செய்க.

CO:2 K:2 12. (அ) தூத்துக்குடியில் போர்த்துகீசியர் ஆட்சியின் மத மாற்றம் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தூத்துக்குடியில் முத்து மற்றும் சங்கு குளிக்கும் தொழிலின் முக்கியத்துவத்தை ஆய்வு செய்க.

CO:3 K:3 13. (அ) தூத்துக்குடி சுதந்திரப் போராட்டத்தில் வ.உ.சி. மற்றும் பாரதியாரின் பங்களிப்பை விளக்குக.

(அல்லது)

(ஆ) வீரபாண்டிய கட்டபொம்மனின் ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்தை ஆய்வு செய்க.

CO:4 K:3 14. (அ) தூத்துக்குடியில் உள்ள கிறிஸ்தவ ஆலயங்கள் மற்றும் நினைவிடங்களின் முக்கியத்துவத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) நவ திருப்பதி மற்றும் நவ கயிலாயம் கோயில்களின் சிறப்பியல்புகளை ஆய்வு செய்க.

CO:5 K:4 15. (அ) தூத்துக்குடியின் பாய்மரக் கப்பல் மற்றும் பருத்தி தொழிலின் வளர்ச்சியை விளக்குக.

(அல்லது)

(ஆ) தூத்துக்குடியில் நடைபெற்ற தொழிலாளர் வேலைநிறுத்தத்தை ஆய்வு செய்க.

பகுதி இ – (5× 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளி

CO:1 K:4 16. (அ) தூத்துக்குடியின் அமைவிடம் அதன் வரலாற்று மற்றும் வர்த்தக முக்கியத்துவத்தை எவ்வாறு வடிவமைத்தது என்பதை விரிவாக விளக்குக.

(அல்லது)

(ஆ) தூத்துக்குடியின் புவியியல் அமைவிடம் அதன் பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வாறு துணைபுரிந்தது என்பதை விரிவாக ஆய்வு செய்க.

CO:2 K:3 17. (அ) தூத்துக்குடியில் டச்சு மற்றும் பிரிட்டிஷ் ஆட்சியின் வருகையையும் அதன் தாக்கத்தையும் விரிவாக விளக்குக.

(அல்லது)

(ஆ) டச்சு ஆட்சியிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சிக்கு தூத்துக்குடி மாறிய வரலாற்று நிலைமையை விரிவாக ஆய்வு செய்க.

CO:3 K:4 18. (அ) சுந்தரலிங்கம் மற்றும் பிற சுதந்திரப் போராட்ட வீரர்களின் பங்களிப்பை விரிவாக விளக்குக.

(அல்லது)

(ஆ) தூத்துக்குடியின் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் பகுதி தலைவர்களின் பங்கினை உதாரணங்களுடன் விரிவாக மதிப்பிடுக.

CO:4 19. (அ) திருச்செந்தூர், மணப்பாடு மற்றும் உவரி ஆகிய புனித

K:5 தலங்களின் சிறப்பியல்புகளை விரிவாக விளக்குக.

(அல்லது)

(ஆ) தூத்துக்குடியை சுற்றியுள்ள புனித தலங்கள் சுற்றுலா வளர்ச்சிக்கு அளிக்கும் பங்களிப்பை விரிவாக மதிப்பிடுக.

CO:5 K:5 20. (அ) தூத்துக்குடியில் புதிய துறைமுகத்தின் தேவை உருவான காரணங்களை விரிவாக விளக்குக.

(அல்லது)

(ஆ) இரு துறைமுகங்களின் இணைப்பும் அதன் பின்னரான சேவைகளும் தூத்துக்குடிக்கு அளித்த பயன்களை விரிவாக ஆய்வு செய்க.